## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.12/2022** **நாள் : 20-04-2022**

**சென்னை குடிநீர் வாரிய சிந்தாதரிப்பேட்டை தலைமை அலுவலகத்தில் புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணி 23.04.2022 சனிக்கிழமை காலை 6 மணி முதல் 24.04.2022 ஞாயிற்று கிழமை காலை 10 மணி வரை மேற்கொள்ளபடவுள்ளதால் இணையதள சேவைகள் அனைத்து செயல்படாது.**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரிய சிந்தாதரிப்பேட்டை தலைமை அலுவலகத்தில் புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணி 23.04.2022 சனிக்கிழமை காலை 6 மணி முதல் 24.04.2022 ஞாயிற்று கிழமை காலை 10 மணி வரை மேற்கொள்ளபடவுள்ளதால் இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர், புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு புகார் மையம், பொதுமக்கள் குறைதீர்க்கும் மையம் மற்றும் எம்.ஆர்.சி. நகரில் தற்போது இயங்கும் தலைமை அலுவலக இணைய தள இணைப்பு ஆகிய அனைத்து சேவைகளும் செயல்படாது.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு 24.04.2022 காலை 10 மணி முதல் வழக்கம்போல் இணைய தள சேவைகள் அனைத்தும் செயல்படும் என குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைக் குடிநீர் வாரியம்